நாள் 04.12.2023 O.S. 242 of 2020 வா.சா. 1 மாரிமுத்து

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் கதவு எண் 10/287 அம்பையாபுரத்தில் குலையநேரி பஞ்சாயத்தில் வசித்து வருகிறேன். நான் எனக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட வீட்டில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தும் வழக்கில் சேர்க்காத வேறு சொத்தும் ராமசாமி நாடாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்தில் தான் என் சகோதரர் முத்து கருப்பன் வசித்து வந்தார் என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் ஒன்றாக தான் வசித்து வந்தோம். 2ம் தபசில் வீட்டில் முருகேசன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். என் அப்பா உயிருடன் இருந்தபோதே என் சகோதரிகள் பங்கு வேண்டாம் என விட்டு கொடுத்து விட்டார்கள் என்றால் சரியல்ல. 1.12.2000ம் ஆண்டில் நான், என் அப்பா, முருகேசன், முத்துகருப்பன் ஆகியோர்கள் சேர்ந்து பாக பிரிவினை எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. 1.12.2000ல் நான், என் அப்பா, முருகேசன், முத்துகருப்பன் ஆகியோர்கள் சேர்ந்து ஆவணம் எண்.2504/2000 ஆக பாக பிரிவினை பத்திரம்எழுதிகொண்டோம் என்றால் சரியல்ல.˙என்னிடம் கேட்காமல் அவர்களாக போட்டு விட்டார்கள். அந்த பாகபத்திரத்தில் 2ம் தபசில் சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றாலும் நான்தான் கையெழுத்து செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனக்கு ஒதுக்கவில்லை. பெண்மக்கள், என் அம்மா ஆகியோர்கள் வாய்மொழியாக விட்டு கொடுத்ததால் தான் மேற்படி பாகபத்திரத்தில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் விட்டுகொடுக்கவில்லை. 1ம் தபசில் சொத்தில் முத்துகருப்பன் வீடு கட்டி அவர் பெயரில் தான் தீர்வை, தண்ணீர் தீர்வை செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்தில் முருகேசன் வீடு கட்டிஅவர் பெயரில் தான் தீர்வை, தண்ணீர் தீர்வை செலுத்தி வருகிறார் என்றால் என் அப்பா சொத்தில் வசித்து வருகிறார். வீடு கட்டவில்லை. என் அப்பா கட்டிய வீட்டில் வசித்து

வருகிறார். குலையநேரி கிராமம் சர்வே எண் 175/1, 177/12, 187/1 என் அப்பாவிற்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பூர்வீகமாய் பாத்தியப்பட்ட சொத்தில் விவசாயம் செய்து அதில் வந்த வருமானத்தை வைத்து தான் மற்ற சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண் 177/12ல் 10செண்டு எனக்கு எழுதி கொடுத்து அதில் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் அது என் அப்பா கிரையம் வாங்கி எனக்கு நன்கொடை பத்திரம் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார். சர்வே எண் 175/1ல் நானும் என் அப்பாவும் சேர்ந்து தங்கராஜ் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். ஆனால் அது எங்களுக்குள் பங்கு வைத்து எனக்குரிய பங்கை நான் கிரையம் கொடுத்துள்ளேன். முன்பே சொத்தை பொறுத்து வாய்மொழியாக பங்கு பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். எனக்கு ஒதுக்கப்பட்ட 10 செண்டில் நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். அதில் 5 கடை கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. சின்ன சின்ன ரூம்பாக கட்டியுள்ளேன். எனக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட சொத்து முழுவதையும் 2000ம் ஆண்டிற்கு முன்பே பங்கு வைத்தோம் என்றால் சரியல்ல.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)